**காலாண்டுப் பொதுத் தேர்வு – 2024**

மொழிப்பாடம் – பகுதி – 1 **தமிழ்**

கால அளவு : 3.00 மணி **பத்தாம் வகுப்பு** பெரும மதிப்பெண்கள்: 100

**குறிப்பு: விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.**

**சரியான விடையைக் குறியீட்டுடன் சேர்த்து எழுதவும். பகுதி 1 15x1=15**

1) எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் -

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

2) முல்லைப்பாட்டு ---- பாவகையால் பாடப்பட்டது.

அ) ஆசிரியப்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

3) வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை -

அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

4) 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது ஆ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

5) எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?

அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்

இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

6) பின்வருவனவற்றுள் முறையான தொடர் எது?

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

7) குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ..........

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

8) "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது .......... வினா.

"அதோ, அங்கே நிற்கும்." என்று மற்றொருவர் கூறியது ........ விடை.

அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ)அறிவினா, மறை விடை

இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

9) கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

10) காலம் கரந்த பெயரெச்சம் என்பது ---------

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) வேற்றுமைத்தொகை

11) பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்

இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

**பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

Padasalai.Net

12) இச்செய்யுளை இயற்றியவர்-----

அ) செய்குதம்பிப் பாவலர் ஆ) கம்பர் இ) சந்தக்கவிமணி ஈ) குமரகுருபரர்

13) 'மதி' என்ற சொல்லின் பொருள்------

அ) மறதி ஆ) உயிர் இ) அறிவு ஈ) அருள்

14 ) அருந்துணை - இலக்கணக்குறிப்பு தருக.

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) பண்புப்பெயர்

15) இச்செய்யுள் அடிகள் இடம்பெற்ற நூல் ------

அ) காசிக்காண்டம் ஆ) நீதிவெண்பா இ) தனிப்பாடல் ஈ) பரிபாடல்

**பகுதி II பிரிவு-1**

**குறிப்பு: எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும்.**
**வினா எண் 21க்கு கட்டாயமாக விடை அளிக்கவும்.** **4x2=8**

16. 'எட்டு' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

17. **விடைகளுக்கு ஏற்ற வினாத் தொடர் அமைக்க.**

அ) ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனின் பெயர் பெப்பர்.

ஆ) வளி, தென்றல், புயல், சூறாவளி எனப் பல்வேறு பெயர்களால் காற்று அழைக்கப்படுகிறது.

18. வசன கவிதை – குறிப்பு வரைக.

19. உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்'
காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்'

அ) கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்?

ஆ) எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

20. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

21. ' விடல் ...' என முடியும் குறளை எழுதுக.

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும்.** **5 x 2 =10**

22. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.

அ) இன்சொல் ஆ) கீரிபாம்பு

23. அகராதியில் காண்க.

அ ) தால், ஆ) உழுவை

24. மயங்கிய – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. கலைச்சொற்கள் தருக. அ) Discussion ஆ) Infrared rays

26. இரு சொற்களையும் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

அ) கொடு – கோடு ஆ) மடு - மாடு

27. பழமொழிகளை நிறைவு செய்க.

அ) விருந்தும் _______________

ஆ) அளவுக்கு ________________

28. **தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

அ. கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

ஆ. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**பகுதி – III பிரிவு – 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடை அளிக்கவும். 2X3=6**

29. சோலைக் (பூங்கா ) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.

30. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பருப்பொருள்கள் சிதறும்படியாக பல ஊழி காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாக ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் ஆகிய உள்ளீடு தோன்றியது.

அ) பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.

ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

இ) பெய்தமழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.

31. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'

- இது போல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

**பிரிவு – 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும்.**

**<u>வினா எண் 34 க்கு கட்டாயமாக விடை அளிக்க வேண்டும்.</u> 2X3=6**

32. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

33. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

34. **அடிபிறழாமல் எழுதுக.**

அ ) 'வாளால் அறுத்து....' எனத் தொடங்கும் குலசேகர ஆழ்வாரின் பாடலை எழுதுக. (அல்லது)

ஆ ) 'சிறுதாம்பு.... ' எனத்தொடங்கும் நப்பூதனாரின் பாடலை எழுதுக.

**பிரிவு – 3**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடை அளிக்கவும். 2X3=6**

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த்தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். - இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

36. உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

37. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்

அருவினையும் மாண்ட தமைச்சு. – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும்.** **5X5=25**

38. அ) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக. (அல்லது)

ஆ) தமிழ் மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்து கொண்ட இரண்டினை எழுதுக.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ) உமது கிராமத்தில் கடந்த வாரம் பெய்த கனமழையால் பழுதுபட்ட சாலைகளை மாற்றித்தருமாறும் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதியும் உரிய அலுவலருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. மதுரை மாவட்டம் 1/23, அன்னை நகர், மேலூர் கிராமத்தில் குடியிருக்கும் கவிமணியின் மகள் மலர்விழி என்பவர் ஊர்ப்புற நூலகத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தம்மை மலர்விழியாகக் கருதி, கொடுக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. அ) மொழிபெயர்க்க:

**The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.**

(அல்லது)

ஆ) உணவு, விருந்து சார்ந்த பழமொழிகளையும் விழிப்புணர்வுத் தொடர்களையும் அகர வரிசைப்படுத்தி எழுதுக.

## பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடை அளிக்கவும்.** **3X8=24**

43. அ) இறைவன், புலவர் இடைக்காடனின் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக. (அல்லது)

ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44. அ) 'புயலிலே ஒரு தோணி' கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக் குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன? (அல்லது)

ஆ) சா. கந்தசாமியின் 'பாய்ச்சல்' என்னும் சிறுகதையை அழகு என்ற சிறுவன் கூறுவதைப் போல் சுவைபட எழுதுக.

45. அ) '**சான்றோர் வளர்த்த தமிழ்**' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது)

ஆ) '**விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்**' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| பள்ளிக்கல்வித்துறை – பெரம்பலூர் மாவட்டம் - பத்தாம் வகுப்பு | | | |
| தமிழ் – காலாண்டுப் பொதுத் தேர்வு – 2024 | | | |
| உத்தேச விடைக்குறிப்புகள் | | | |
| பகுதி - I | | | |
| பகுதி - I | அனைத்து வினாக்களுக்கும் குறியீட்டுடன் விடையளிக்கவும். | | 15 x 1 = 15 |
| வினா எண் | விடைகள் | | மதிப்பெண் |
| 1 | இ | எம் நா + தமிழ் + | 1 |
| 2 | அ | ஆசிரியப்பா | 1 |
| 3 | ஆ | மணி வகை | 1 |
| 4 | அ | சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது | 1 |
| 5 | ஈ | கூவிளம் தேமா மலர் | 1 |
| 6 | இ | தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு | 1 |
| 7 | இ | குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் | 1 |
| 8 | இ | அறியா வினா, சுட்டு விடை | 1 |
| 9 | ஈ | அங்கு வறுமை இல்லாததால் | 1 |
| 10 | ஆ | வினைத்தொகை | 1 |
| 11 | ஈ | வானத்தையும் பேரொலியையும் | 1 |
| 12 | அ | செய்குதம்பிப் பாவலர் | 1 |
| 13 | இ | அறிவு | 1 |
| 14 | அ | பண்புத்தொகை | 1 |
| 15 | ஆ | நீதிவெண்பா | 1 |
| பகுதி - II | | | |
| பிரிவு - I | எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.<br>21 - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும் | | 4 x 2 = 8 |
| 16 | ❖ பொதுமொழி - எட்டு - ஓர் எண்.<br>❖ தொடர்மொழி - எள் + து - எள்ளை உண் என்னும் பொருளைத் தருகிறது. | | 2 |
| 17 | விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க. ( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக ) | | |
| அ | ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனின் பெயர் என்ன? | | 1 |
| ஆ | வளி, தென்றல்,புயல், சூறாவளி எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுவது எது ? | | 1 |
| 18 | உரைநடையும் கவிதையும் இணைத்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது. | | 2 |
| 19<br>அ | கும்பகருணனே உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்கத் தொடங்கிவிட்டது. அதனைக் காண்பதற்கு எழுந்திடுவாய் எழுந்திடுவாய் என்று சொல்லி எழுப்பினார்கள். | | 1 |
| ஆ | எமனுக்குத் தூதுவரான வில்லைப்பிடித்த இராமன் கையில் உறங்கப் போ என்றனர். | | 1 |
| 20 | அருளைப் பெருக்கு! அறிவைத் திருத்து!<br>மருளை அகற்றி கல்வியைப் போற்று! | | 2 |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| 21 | பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே<br>நல்லார் தொடர்கை விடல் - திருவள்ளுவர் | 2 |
| பிரிவு II | எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. | 5x2=10 |
| 22 | சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க. | |
| அ | இன்சொல் – பண்புத்தொகை (இன்சொல் பேசி விருந்தினரை வரவேற்க வேண்டும்.) | 1 |
| ஆ | கீரிபாம்பு -உம்மைத்தொகை (கீரியும் பாம்பும் போல சண்டையிடக் கூடாது ) | 1 |
| 23 | அகராதியில் காண்க. | |
| அ | தால் – நாக்கு, தாலாட்டு | 1 |
| ஆ | உழுவை – புலி, மீன் வகை | 1 |
| 24 | மயங்கிய – மயங்கு அ + ய் + இன் + | 2 |
| | மயங்கு – பகுதி | |
| | இன் – இறந்த கால இடைநிலை, புணர்ந்து 'ன்' கெட்டது | |
| | ய் – உடம்படுமெய் | |
| | அ – பெயரெச்ச விகுதி | |
| 25 | கலைச்சொற்கள் தருக. | |
| அ | Discussion –கலந்துரையாடல் | 1 |
| ஆ | Infrared rays – அகச்சிவப்புக் கதிர்கள் | 1 |
| 26 | இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.<br>( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக ) | |
| அ | கொடு – கோடு – கொடுப்பதற்கு எல்லைக்கோடு கிடையாது. | 1 |
| ஆ | மடு – மாடு - மடுவில் மாடுகள் குளித்தன. | 1 |
| 27 | பழமொழிகளைநிறைவுசெய்க. | |
| அ | விருந்தும் மருந்தும் மூன்று நாள் | 1 |
| ஆ | அளவுக்கு விஞ்சினால் அமுதமும் நஞ்சு . | 1 |
| 28 | தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க. | |
| அ | குளிர்ந்தக் கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான். | |
| ஆ | நிழல் தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும். | |
| | பகுதி - III | |
| பிரிவு - I | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. | 2 x 3 = 6 |
| 29 | சோலைக்காற்று : நான் வாழும் இடம் சோலைகளும் வனங்களும். நீ?<br>மின்விசிறிக் காற்று : நான் வாழும் இடம் வீடுகளும் அலுவலகங்களும்<br>சோலைக்காற்று : மாலை நேரங்களில் என்னைத் தேடி மக்கள் வருவர்.<br>மின்விசிறிக் காற்று : வீட்டுக்குள்ளே இருப்பவர்களுக்குக் குளிர்ந்தக் காற்றை நான் தருவேன்.<br>சோலைக்காற்று : மின்சாரம் இல்லை எனில் நீ இல்லை. நான் இயற்கையானவன்.<br>மின்விசிறிக் காற்று : ஆம். எனக்கு விலை உண்டு . நீ விலை மதிப்பற்றவன். நீயே சிறந்தவன். ( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக ) | 3 |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| 30 | உரைப்பத்தியைப் படித்து, வினாக்களுக்கு விடை தருக. | |
| அ | மீண்டும் மீண்டும் | 1 |
| ஆ | தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. | 1 |
| இ | பெய்மழை | 1 |
| 31 | நாற்று - கத்தரி நாற்று நடப்பட்டுள்ளது<br>கன்று - மாங்கன்று நடப்பட்டுள்ளது<br>பிள்ளை - தென்னம் பிள்ளை நடப்பட்டுள்ளது<br>வடலி - பனை வடலி நடப்பட்டுள்ளது<br>பைங்கூழ் - நெல்லின் பைங்கூழ் நடப்பட்டுள்ளது<br>குருத்து - வாழைக் குருத்து அழகாக உள்ளது. | |
| பிரிவு -II | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.<br>34 - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும் | 2 x 3 = 6 |
| 32 | திருவடியில் அணிந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடட்டும்.<br>இடையில் அரைஞாண் மணியோடு ஒளி வீசுகின்ற அரைவடங்கள் ஆடட்டும்.<br>தொந்தியுடன் கூடிய சிறு வயிறும் ஆடட்டும்<br>பொட்டுடன் கூடிய நெத்திச்சுட்டியும் பதிந்தாடட்டும்<br>கம்பிகளால் உருவான குண்டலங்களும், காதின் குழைகளும் அசைந்தாடட்டும்<br>கொண்டையும் அதனைச் சுற்றியுள்ள முத்துகளும் சேர்ந்தாடட்டும்<br>பழமையான வைத்தியநாதபுரியில் எழுந்தருளி இருக்கும் முருகப்பெருமானே<br>பவளம் போன்ற அழகிய மேனியும் ஆடும்படி செங்கீரை ஆடுவாயாக | 3 |
| 33 | **ஆற்றுப்படை**<br>ஆற்றுப்படுத்தும் கூத்தன் வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம், நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ஆற்றுப்படை<br>**சிற்றூரை அடைதல்**<br>பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள், இரவில் சேர்ந்து தங்குங்கள்<br>எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணியுங்கள்<br>சிவந்தப் பூக்கள் கொண்ட அசோக மரங்களை உடைய பாதையில் செல்லுங்கள்<br>மூங்கில் ஓசை எழுப்பும் மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்<br>**நன்னின் கூத்தன்**<br>பகைவரே இல்லாத நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்<br>**உணவாகப் பெறுவீர்கள்**<br>உங்கள் வீட்டிற்குள் செல்வது போல அவர்களுடைய வீட்டிற்குள்ளும் உரிமையுடன் செல்லுங்கள்<br>நீண்ட தூரம் கடந்து வந்த உங்களின் துன்பம் தீர இனிய சொற்கள் கூறுவார்கள்<br>அங்கு நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள் | 3 |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| 34 | வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்<br>மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்<br>மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மாநீ !<br>ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே . | 3 |
| | (அல்லது) | |
| | *சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்<br>உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்<br>நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய<br>கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர<br>இன்னே வருகுவர், தாயர்" என்போள்<br>நன்னர் நன்மொழி கேட்டனம் * | |
| பிரிவு 3 | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. | 2 x 3 = 6 |

| | சொற்றொடர் | தொடர்வகை | விளக்கம் | |
|---|---|---|---|---|
| 35 | மல்லிகைப் பூ | இருபெயரொட்டுப் பண்புத்தொகை | மல்லிகை – சிறப்புப் பெயர்<br>பூ - பொதுப்பெயர் | 3 |
| | ஆடுமாடுகள் | உம்மைத்தொகை | ஆடுகளும் மாடுகளும் | |
| | குடிநீர் | வினைத்தொகை | குடித்தநீர், குடிக்கின்றநீர், குடிக்கும்நீர் என மூன்று காலத்திற்கும் பொருந்தும். | |
| | சுவர்க்கடிகாரம் | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை | சுவரின் கண் மாட்டப்படும் கடிகாரம் | |
| | தண்ணீர்த் தொட்டி | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை | தண்ணீரை உடையத் தொட்டி | |
| | மணி பார்த்தான் | இரண்டாம் வேற்றுமைத் தொகை | மணியைப் பார்த்தான் | |

| | | | |
|---|---|---|---|
| 36 | அணி | உவமை அணி | 3 |
| | அணி இலக்கணம் | ஒரு செய்யுளில் உவமை, உவமேயம், உவமஉருபு ஆகிய மூன்று வெளிப்படையாக வருவது உவமை அணியாகும். | |
| | சான்று | "வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்<br>கோலொடு நின்றான் இரவு." | |
| | விளக்கம் | உவமை - வேலொடு நின்றான் இடுஎன்றது | |
| | | உவமேயம் - கோலொடு நின்றான் இரவு | |
| | | உவம உருபு - போலும் | |

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| | அணிப் பொருத்தம் | அதிகாரத்தைக் கொண்டு வரிவிதிப்பது, வேல் கொண்டு வழிப்பறி செய்வதற்குச் சமமாகும் என ஒப்புமை கூறப்பட்டுள்ளதால், இக்குறட்பா உவமை அணிக்குப் பொருத்தம் ஆயிற்று. | |

| 37 | சீர் | அசை | | | வாய்பாடு | 3 |
|---|---|---|---|---|---|---|
| | கரு / வியும் | நிரை | நிரை | - | கருவிளம் | |
| | கா / லமும் | நேர் | நிரை | - | கூவிளம் | |
| | செய் / கை / யும் | நேர் | நேர் | நேர் | தேமாங்காய் | |
| | செய் / யும் | நேர் | நேர் | - | தேமா | |
| | அரு / வினை / யும் | நிரை | நிரை | நேர் | கருவிளங்காய் | |
| | மாண் / ட | நேர் | நேர் | - | தேமா | |
| | தமைச் / சு | நிரைபு | | | பிறப்பு | |
| | இக்குறட்பா பிறப்பு என்னும் வாய்பாட்டைக் கொண்டு முடிந்துள்ளது. | | | | | |

| பகுதி IV | அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. | 5x5=25 |
|---|---|---|

| 38 | பாடல் அடிகள் | தமிழ் | கடல் | 5 |
|---|---|---|---|---|
| | முத்தமிழ் | இயல், இசை, நாடகம் | முத்தினை அமிழ்ந்து எடுத்தல் | |
| | முச்சங்கம் | முதல், இடை, கடை | மூன்று வகையான சங்குகள் | |
| | மெத்த வணிகலன் | ஐம்பெருங்காப்பியங்கள் | மிகுதியான வணிகக் கப்பல்கள் | |
| | சங்கத்தவர் காக்க | சங்கப் பலகையில் இருந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தமை | நீரலைகளைத் தடுத்து நிறுத்தி சங்கினைக் காத்தல் | |

(அல்லது)

- ❖ மனோன்மணீயம் சுந்தரனார் எழுதிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலைத் தமிழக அரசு விழாக்கள் அனைத்திலும் தொடக்கப் பாடலாகப் பாடுவதற்கு வழி வகுத்தார்
- ❖ கல்வித்துறையை பள்ளிக்கல்வி, உயர்கல்வி என இரண்டாகப் பிரித்தார்
- ❖ தமிழ் வளர்ச்சித் துறை எனப் புதிதாக ஒரு துறையை உருவாக்கி அதற்குத் தமிழறிஞர் ஒருவரையே அமைச்சராக்கி அழகு பார்த்தார்
- ❖ 2010 ஆம் ஆண்டு கோவையில் தமிழ்நாடு அரசின் சார்பில் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை நடத்தித் தமிழின் பெருமையை உலகறியச் செய்தார்

5

39

உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம்

அனுப்புநர்

பாரதி வே
கம்பன் நகர்,
பெரம்பலூர்.

பெறுநர்

உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்பு ஆணையம்,
பெரம்பலூர்.

5

Padasalai.Net

ஐயா,

பொருள் தரம :ற்ற உணவு வழங்கிய உணவு விடுதியின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுதல் சார்பு.

வணக்கம், நான் இன்று காலை பெரம்பலூரில் உள்ள அறுசுவை உணவு விடுதிக்குச் சென்றேன், அங்கு வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது. இதுகுறித்து கேட்டபோது பொறுப்பில்லாமல் பதில் அளித்தனர்எனவே அந்த உணவு விடுதி மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் . .கேட்டுக்கொள்கிறேன் உரிய சான்றுகள் மற்றும் இரசீது நகலை இத்துடன் இணைத்துள்ளேன்

நன்றி

நாள் : 200.9 2024. இப்படிக்கு

இடம் : பெரம்பலூர் தங்கள் உண்மையுள்ள

பாரதி வே

இணைப்பு

1 உணவின் புகைப்படங்கள்

2 கட்டண ரசீது

உறைமேல் முகவரி

பெறுநர்

உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்,
பெரம்பலூர்.

(அல்லது)

கூட்டு விண்ணப்பம்

அனுப்புநர்

ஊர்ப்பொதுமக்கள்,
கம்பன் நகர்,
பெரம்பலூர்.

பெறுநர்

மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர்அலுவலகம்,
பெரம்பலூர். 5

ஐயா,

பொருள் :கடந்த வாரம் பெய்த கனமழையால் பழுதுபட்ட சாலைகளை பழுது நீக்கித் தருமாறு வேண்டுதல் - சார்பு.

வணக்கம், நாங்கள் பெரம்பலூர் கம்பன் நகரில் வசித்து வருகிறோம். கடந்த வாரம் பெய்த புயல் மழையால் சாலைகள் பழுதடைந்துள்ளது. சாலைகள் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் வாகனங்கள் செல்வது மிகவும் சிரமமாக உள்ளது. தேவையற்ற போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே சாலைகளை

Padasalai.Net

| | | |
|---|---|---|
| | விரைந்து பழுது நீக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.<br>நன்றி<br>நாள் : 200.9 2024. இப்படிக்கு<br>இடம் : பெரம்பலூர் தங்கள் உண்மையுள்ள<br>ஊர்ப்பொதுமக்கள்<br>உறைமேல் முகவரி<br>பெறுநர்<br>மாவட்ட ஆட்சியர் அவர்கள்,<br>மாவட்ட ஆட்சியர்அலுவலகம்,<br>பெரம்பலூர். | |
| 40 | சந்த நயம், எதுகை, மோனைச் சொற்கள் அமைந்திருப்பின் (கவிதை வடிவில்) முழு மதிப்பெண் வழங்கலாம்.<br>**அலைபேசி**<br>அமைதியாய் வந்தது<br>ஆரவாரமாய் நுழைந்தது<br>இன்பம் தந்தது<br>இளமையை வளைத்தது<br>முதுகிலே ஏறி<br>மூக்கணாங்கயிறு போட்டது<br>ஆசையாய் தொட்டவனை<br>அடிமையாக்கிச் சென்றது<br>அலைபேசி மோகம்<br>ஆபத்தாய் முடிந்தது | 5 |
| 41 | நூலக உறுப்பினர் படிவம்<br>_மதுரை__ மாவட்ட நூலக ஆணைக்குழு<br>~~மைய~~ / ~~கிளை~~/ஊர்ப்புற நூலகம் ____மேலூர்__________________<br>உறுப்பினர் சேர்க்கை அட்டை<br>அட்டை எண் : 123 உறுப்பினர் எண் : 456<br>1. பெயர் : மலர்விழி க<br>2. தந்தை பெயர் : கவிமணி<br>3. பிறந்த தேதி : 26/05/2001<br>4. வயது : 23<br>5. படிப்பு : 10 ம் வகுப்பு<br>6. தொலைபேசி/அலைபேசி எண் : 9876543210<br>7. அஞ்சல் முகவரி : 23/1, அன்னை நகர் ,<br>மேலூர்<br>மதுரை மாவட்டம்<br>நான் _மேலூர், ஊர்ப்புற_ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் | 5 |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| | காப்புத்தொகை ரூ. _20___ சந்தாதொகை ரூ. __5__ ஆக மொத்தம் ரூ. __25___ ரொக்கமாகச் செலுத்துகிறேன் . நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.<br>இடம் : மேலூர் தங்கள் உண்மையுள்ள<br>நாள் : 20/08/2024 மலர்விழி க<br><br>~~திரு~~ / ~~திருமதி~~ / செல்வி ~~செல்வன்~~ / ____ மலர்விழி க_________ அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன் .<br>அறிவு சீ<br>பிணைப்பாளர் கையொப்பம்<br>அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)<br>(மாநில/மைய/அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர்/ மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்/ சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி/மாநகராட்சி/ஒன்றிய பேரூராட்சி உறுப்பினர்கள்) | |
| 42 | புலர்காலைப் பொழுது<br>❖ தங்க நிறக் கதிர்களைக் கொண்ட கதிரவன் காலையில் உதிக்கின்றது.<br>❖ தன் பொன்னிறக் கதிர்களால் இருளை விரட்டுகிறது.<br>❖ வெண்ணிற மேகமானது அங்குமிங்கும் நகர்கிறது.<br>❖ வண்ண நிறமான பறவைகள் காலையில் தன் இசைக் கீதத்தை இசைக்கின்றன.<br>❖ சுறுசுறுப்பான வண்ணத்துப் பூச்சிகள் மலர்களைச் சுற்றி நடனமாடுகின்றன.<br>❖ மலர்களின் நறுமணம் காற்றை நிரப்புகிறது.<br>❖ தென்றல் காற்று எங்கும் வீசி இதமான சூழலைத் தருகிறது. | 5 |
| | (அல்லது) | |
| | ❖ அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு<br>❖ உப்பிட்டவரை உள்ளளவும் நினை.<br>❖ உப்பில்லாப் பண்டம் குப்பையிலே<br>❖ ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.<br>❖ விருந்தும் மருந்தும் மூன்று நாள்கள்.<br>( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக ) | 5 |
| பகுதி IV | அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. | 3x8 =24 |
| 43 அ | ❖ இடைக்காடனார் பாண்டிய மன்னன் அவையில் கவிதை படித்தார்.<br>❖ பாண்டிய மன்னன் அதனைக் கவனிக்காமல் அவமதித்தார்<br>❖ அதனால் இடைக்காடனார் பெரிதும் வருத்தம் அடைந்தார்<br>❖ இடைக்காடனார் இறைவனிடம் மன்னனின் செயலை முறையிட்டார்<br>❖ சொல்லின் வடிவான பார்வதி தேவியையும் பொருளின் வடிவான உன்னையும் அவமதித்தார்<br>❖ இதனைக் கேட்ட இறைவன் கடம்பவனத் திருக்கோயிலை விட்டு நீங்கி நேர் வடக்கே ஒரு கோயிலை உண்டாக்கி அங்கு சென்றார்<br>❖ இறைவனிடம் மன்னன் வேண்டினார் | 8 |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ❖ தன்னாலோ தன் படையாலோ அல்லது என் பகைவராலோ ஏதேனும் இடையூறு ஏற்பட்டதா என வருந்தினார்<br>❖ காட்டுவிலங்குகளாலோ அல்லது கள்வராலோ ஏதேனும் இடையூறு ஏற்பட்டதா என வருந்தினார்<br>❖ இல்லற, துறவற நெறியில் இருந்து தவறினேனா என வருந்தினார்<br>❖ இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை என அசரீரி ஒலித்தது<br>❖ தவறை உணர்ந்த மன்னன் புலவரிடம் மன்னிப்பு கேட்டு அப்புலவருக்குச் சிறப்பு செய்தான்<br>❖ புலவர் இடைக்காடனாரும் இறைவனும் மன்னனை மன்னித்தனர். | |
| | (**அல்லது**) | |
| ஆ | வரவேற்பு<br>❖ தமிழரின் சிறந்தப் பண்பு விருந்தோம்பல்<br>❖ நானும் அதைக் கடைபிடித்தேன்<br>❖ என் மாமா ஒரு நாள் வீட்டிற்கு வந்தார்<br>❖ அவரை வருக வருக என வரவேற்றேன்<br>❖ பிறகு இருக்கையில் அமரச் செய்தேன்<br>❖ குடிக்க நீர் கொடுத்தேன்<br>❖ வீட்டில் அனைவரும் நலமா? என வினவினேன்<br>உணவு உபசரிப்பு<br>❖ அம்மா அவருக்கு மாமிச உணவு தயார் செய்தார்<br>❖ வாழை இலையில் உணவு அளித்தேன்<br>❖ அவர் விரும்பி உண்ணும் உணவுகளை இலையில் அதிகமாக வைத்தேன்<br>❖ அவர் அருகிலேயே அமர்ந்து தேவையான உணவுகளைப் பரிமாறினேன்<br>❖ உணவு உண்டவுடன் தாம்பூலம் வழங்கினேன்<br>❖ பிறகு மாமா சற்று ஓய்வு எடுத்தார்<br>நகர்வலம்<br>❖ மாலை மாமாவுடன் கோவில், கடைவீதி போன்ற இடங்களுக்குச் சென்றேன்<br>❖ மாலை சிற்றுண்டி அங்கேயே உண்டோம்<br>வழி அனுப்புதல்<br>❖ மாமா ஊருக்குச் செல்வதாகக் கூறினார்<br>❖ அவரை பிரிய மனம் இல்லாமல் வழி அனுப்பினேன்<br>❖ நான் அவருடன் பேருந்து நிலையம் வரை சென்று வழி அனுப்பினேன்<br>❖ மிகுந்த மன நிறைவு ஏற்பட்டது (பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக) | 8 |
| 44அ | **புயலிலே ஒருதோணி**<br>முன்னுரை<br>❖ இக்கதையின் ஆசிரியர் ப. சிங்காரம்<br>❖ இக்கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகள், அடுக்குத்தொடர்கள், | 8 |

Padasalai.Net

ஒலிக்குறிப்புச் சொற்கள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்

வருணனைகள்

- மேகப்பொதிகள் திரண்டு கும்மிருட்டாய் நின்றன.
- இடிமுழக்கம் வானைப்பிளந்தது.
- வானம் உடைந்து மழை கொட்டுகொட்டென்று கொட்டியது.
- எலும்புகள் முறிவது போல நொறுநொறு ஒலி
- அவுலியா மீன்கள் – நீர் எருமைகள்
- தொங்கான் அப்படியும் இப்படியும் தாவிக்குதித்துக் கெக்கலித்தன.
- இடி முழக்க சீனப் பிசாசுகள் தாவி வீசுகின்றன.

அடுக்குத் தொடர்கள்

- ஓடி வாருங்கள் ஓடி வாருங்கள்
- இருட்டிருட்டு
- தாவித்தாவி
- விழுந்துவிழுந்து
- சூரியன் சூரியன்
- கூட்டம் கூட்டமாய்
- கரை கரை கரை
- பிலவான் பிலவான்

ஒலிக்குறிப்புச் சொற்கள்

- மொழுமொழு
- கிடுகிடுக்கும்
- நொறுநொறு
- மரமரப்பு
- திடுமென
- கெக்கலித்தன
- நொய்ங் புய்ங் நொய்ங் புய்ங்

கதைச்சுருக்கம்

- வெய்யில் வேகமாக மறைந்துவிட்டது. வானம் மிகவும் இருண்டது,
- கிடுகிடுக்கும் இடி மின்னல் வானத்தைப் பிளந்தது
- வானம் உடைந்து வெள்ளம் கொட்டு கொட்டு என்று கொட்டியது.
- எலும்பு நொறு நொறுங்குவது போன்று ஒலிகேட்டது.
- கப்பித்தானும் மாலுமிகளும் வானையும் கடலையும் பார்த்தனர்.
- பாய்மரத்தை இறுக்கிக் கட்டினர். தோணி கடலில் தடுமாறியது.
- வானம் பிளந்து நெருப்பைக் கக்கியது. தோணி தாவிக் குதிகுதித்து சுழன்று தடுமாறியது.
- சீனப்பிசாசுகள் தாவிக்குதித்தன. அவுலியா மீன்கள் தாவிக்குதித்தன.
- மழை ஓய்ந்தது. தோணி சின்னாபின்னம் ஆகியிருந்தது.
- மாலுமிகள் ஓட்டையை அடைத்தனர்

Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ❖ கரை தென்பட்டது. பினாங்குத் துறைமுகத்தை அடைந்தனர்.<br>முடிவுரை<br>புயலிலே ஒருதோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை அழகாக விவரிக்கின்றன. | |
| | (அல்லது) | |
| ஆ | **பாய்ச்சல் – சா. கந்தசாமி**<br>**தெருமுனையில் ஏதோ சப்தம்**<br>❖ அழகு சாலைக்கு வந்தான்.<br>❖ நீண்ட வாலும் குரங்கின் முகமும், கால்களில் சலங்கையும் உடல் முழுவதும் பச்சை நீல வண்ணமுமான அனுமன் உரு கொண்ட ஒருவர் மரத்திலிருந்து கீழே இறங்கினார்.<br>❖ அனுமன் வலது காலையும் இடது காலையும் தரையில் உதைத்து நடந்தார்.<br>❖ ஒரு கடையில் தொங்கிய வாழைத்தாரில் இருந்த பழங்களைப் பறித்து, எட்டியவர்களுக்கெல்லாம் கொடுத்தார். அழகுக்கும் கிடைத்தது.<br>**கூட்டம் வட்டமாக மாறியது.**<br>❖ சதங்கையும் மேளமும் நாதசுரமும் ஒன்றாக இணைந்தன.<br>❖ அனுமன் தாவிக்குதித்து, பாய்ந்து சுழன்று ஆடினார். புழுதி கிளம்பியது.<br>❖ அழகுக்கு உடம்பே தன் வசமிழந்து போவது போல இருந்தது.<br>❖ அனுமன் கீச் கீச் என்று கத்திக் கொண்டே பந்தலில் மறைந்தார்.<br>❖ வாலில் பெரிய தீப்பந்தத்துடன் குதித்தார்.<br>❖ பெரிதாகச் சிரித்தார். வாலை மேலே தூக்கிச் சுற்றினார்.<br>❖ தீ வட்டமாகச் சுழன்றது.<br>❖ வேகம் கூடக் கூட கூட்டம் கூடியது.<br>❖ தீயின் சுவாலை மெல்ல மெல்லத் தணிந்தது.<br>❖ அழகு அவர்கள் அருகில் சென்று, அனுமார் வாலை வாங்கிக் கொண்டான்.<br>❖ அனுமார் நடையில் வேகம் கூடியது.<br>❖ கூட்டம் குறையத் தொடங்கியது.<br>❖ திடீரென அனுமன் துள்ளிப் பாய்ந்தார்.<br>❖ இவன் தோளிலிருந்து வால் நழுவி தரையில் விழுந்தது.<br>❖ அனுமார் இன்னொரு பாய்ச்சல் பாய்ந்து வேகமாக ஆட ஆரம்பித்தார்.<br>❖ பதுங்கியும் பாய்ந்தும் ஆடினார்.<br>❖ ஆட ஆட புழுதி புகை போல் எழுந்தது.<br>❖ கழுத்து மணி அறுந்துக் கீழே விழுந்தது.<br>❖ மேல் மூச்சு வாங்க அனுமார் ஆட்டத்தை நிறுத்தினார்.<br>❖ மேளமும் நாதசுரமும் நின்றன.<br>❖ ஆட்டம் முடிந்ததால் கூட்டமும் கலைய ஆரம்பித்தது.<br>❖ அனுமார் வாயால் மூச்சு விட்டுக் கொண்டே ஆலமரத்தில் சாய்ந்து கொண்டார். | 8 |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ❖ மேளக்காரர் சேர்ந்த பணத்தைக் கணக்குப் பார்த்துப் பிரித்தார்.<br>❖ அனுமாரிடம் அவர் பங்கை நீட்டினான்.<br>❖ அவர் ராமுவிடம் கொடுக்கும்படி சைகை காட்டினார்.<br>❖ ஆற்றங்கரை கோயில் தூணில் சாய்ந்து பெரிதாகக் கொட்டாவி விட்டார்.<br>❖ அனுமார் வாலைப் பிடுங்கிப் போட்டார்.<br>❖ அப்புறம் வாய், இடுப்பு வேட்டி, மார்புக் கச்சை, ராமர் படம், கால் சதங்கை . கைச்சதங்கை, ஒவ்வொன்றையும் அகற்றினான்.<br>**அனுமாரைப் பார்த்து சிரித்தான்.**<br>❖ அவர் அருகில் அழைத்து ஆட்டம் எல்லாம் பார்த்தாயா என்றார்.<br>❖ வாலில் நெருப்பு வைத்த போது ஊரே எரியப் போகுது என்று பயந்தேன் என்றான்.<br>❖ அனுமார் தரையில் அடித்துப் பெரிதாகச் சிரித்தார்.<br>❖ எனக்கும் உங்கள மாதிரி ஆடனும்னு ரொம்ப ஆசை என்றான்.<br>❖ அப்படியாளங்கே ஆடி ....க் காட்டு என்றார்.<br>❖ அழகு எழுந்து தரையில் கிடந்த வாலை எடுத்து இடுப்பில் கட்டினான்.<br>❖ காலில் சதங்கையைச் சுற்றிக்கொண்டு அனுமார் மூஞ்சியை எடுத்து மாட்டிக்கொண்டு ஆடனான்.<br>❖ நேரம் ஆக ஆக அடி தப்பியது; தன் போக்கில் ஆடினான்.<br>❖ அனுமார் மெல்ல அடிபோட்டு ஆடிக் காட்டினார்.<br>❖ இருவரும் சில நொடிகளில் துரிதகதியில் வேகமாக ஆடினர்.<br>❖ அனுமார் தவறி விழுந்தார். அழகு பற்கள் வெளியே தெரிய சத்தமாக சிரித்து கைகளை ஆட்டி ஆட்டி எம்பி எம்பி வேகமாக ஆடிக்கொண்டிருந்தான். | |
| 45 | சான்றோர் வளர்த்த தமிழ்<br>குறிப்பு சட்டகம்<br>முன்னுரை - தமிழக எல்லை – இலக்கியங்கள் – சான்றோர்கள் – சிறப்புகள் - முடிவுரை<br><u>முன்னுரை</u><br>❖ சான்றோர் வளர்த்த தமிழ் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.<br><u>தமிழக எல்லை</u><br>❖ வடவேங்கடம் முதல் தென் குமரி வரை தமிழகத்தின் எல்லைகள் ஆகும்.<br><u>இலக்கியங்கள்</u><br>❖ கண்ணி, பிள்ளைத்தமிழ், சதகம், பரணி, கலம்பகம், உலா, அந்தாதி, கோவை போன்ற 96 வகையான சிற்றிலக்கியங்கள் காணப்படுகின்றன.<br>❖ பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், பதினெண் மேல்கணக்கு நூல்கள் முதலியவை காணப்படுகின்றன.<br>❖ ஐம்பெருங்காப்பியங்களும் ஐஞ்சிறுங்காப்பியம் போன்ற காப்பிய இலக்கியங்களும் காணப்படுகின்றன. | 8 |

Padasalai.Net

<u>தமிழ் வளர்த்த சான்றோர்கள்</u>

சங்க இலக்கிய காலம் முதல் இன்று வரை தமிழை வளர்த்தப் பெருமைக்கு உரியவர்கள் பலர் அவர்களுள் நான் அறிந்த சிலர்

- ❖ தொல்காப்பியம் - தொல்காப்பியர்
- ❖ திருக்குறள் - திருவள்ளுவர்
- ❖ கம்பராமாயணம் - கம்பர்
- ❖ கனிச்சாறு - பாவலரேறு பெருஞ்சித்திரனார்
- ❖ பாப்பா பாட்டு - பாரதியார்
- ❖ திருவாசகம் - மாணிக்கவாசகர்
- ❖ திருவாசகம் ஆங்கில மொழிபெயர்ப்பு - ஜி.யு.போப்
- ❖ சதுரகராதி - வீரமாமுனிவர்
- ❖ சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்

<u>தமிழின் சிறப்புகள்</u>

- ❖ முதல், இடை, கடை என முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது.
- ❖ தமிழ் செம்மொழி ஆகும்.
- ❖ முதன்முதலில் ஒரு மொழிக்காக மாநாடு நடத்தப்பட்ட மொழி தமிழ். மாநாடு நடத்தப்பட்ட இடம் மலேசியா
- ❖ தமிழ்மொழி சொல்வளம் மிக்கது.
- ❖ ஏராளமான கலைச்சொற்களைக் கொண்டுள்ளது.
- ❖ பிறமொழிகளுக்கு தாயாகத் தமிழ் விளங்குகிறது
- ❖ பிறமொழித் தாக்கம் இல்லை
- ❖ தனித்து இயங்கும் - போன்ற பல்வேறு சிறப்புகளைக் கொண்டது.

<u>முடிவுரை</u>

- ❖ சான்றோர்களால் வளர்க்கப்பட்ட தமிழைப் போற்றுவோம். தமிழுக்கு இயன்ற தொண்டு செய்வோம்.

சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் – க. சச்சிதானந்தன்

(அல்லது)

<u>**விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்**</u>

**முன்னுரை**

- ❖ விண்வெளியில் பறந்த முதல் பெண்மணி கல்பனா சாவ்லா அவர்களைப் பற்றி கட்டுரையில்
  காண்போம்.

**பிறப்பு**

- ❖ ஹரியானா மாநிலம் கர்னலில் 07.10.1961ல் பிறந்தவர் .
- ❖ பெற்றோர் ; பனார்சிதாஸ் சன்யோகிதா -

**கல்வி**

- ❖ அரசுப் பள்ளியில் தன்னுடைய ஆரம்பக் கல்வியைக் கற்றார்.

Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ❖ விண்வெளித் துறையில் இளநிலை முதல் முனைவர் பட்டம் வரை படித்தார்<br>**விண்வெளிப் பயணம்**<br>❖ விமானம் ஓட்ட, பயிற்சி பெற்றார்.<br>❖ நாசாவில் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றார்.<br>❖ .ஆம் ஆண்டு தனது முதல் விண்வெளிப் பயணத்தைத் தொடங்கினார் 1997<br>❖ .மணி நேரம் விண்வெளியில் இருந்து சாதனை படைத்தார் 372<br>**கொலம்பியா விண்கல நிகழ்வு**<br>❖ 2003, ஜனவரி - 16ல் கொலம்பியா விண்கலத்தில் சென்றார்.<br>❖ நாட்கள் ஆய்வை முடித்து பூமிக்குத் திரும்பும் போது 16, விண்கலம் வெடித்துச் சிதறியது .<br>❖ பயணம் செய்த அனைவரும் இறந்தனர்.<br>**முடிவுரை**<br>❖ தன் கனவை நனவாக்கிய சாதனைப் பெண் கல்பனா சாவ்லாவைப் போன்று நாமும் உழைத்து வாழ்வில் உயர்வோம் | |


| ஆக்கம் | |
|---|---|
| இரா.வேல்முருகன்<br>நேரு மேல்நிலைப்பள்ளி, எறையூர்<br>வேப்பந்தட்டை வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621133 | பெ. ஜெயராமன்<br>அரசு மேல்நிலைப்பள்ளி, அம்மாபாளையம்,<br>பெரம்பலூர் வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621101. |


Padasalai.Net